# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் -01 | 14-03-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -025



நேர்த்திறந்துள் கலையில் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,

அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

RV
பந்தல் சேவை,
தர்மபுரம்.

(சி-9407)


# கூட்டமைப்புக்கு ஆதரவாக யாழ்.பல்கலை மாணவர்

# நாளை முதல் முழுவீச்சில் பிரச்சாரத்தை ஆரம்பிப்பர்

## அனைத்துப்பீட மாணவர்களும் பங்கேற்பு

(வடமராட்சி)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் நாளை முதல் ஈடுபடப்போவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. அனைத்துப்பீட மாணவர்களும் முழுவீச்சில் இப்பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.**

தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகளை முறியடிக்கவும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளென்ற கொள்கை முன்னெடுப்புடன் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகவும் செயற்படப்போவதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அத்துடன் நாளை திங்கட்கிழமை முதல் முழுவீச்சில் பல்கலைக்கழகத்தின் அனைத்துப்பீட மாணவர்களும், மக்களிடையே பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடுவரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர் வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட முன்வந்திருப்பது தமக்கொரு உந்து சக்தியை ஏற்படுத்தியுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் மகிழ்ச்சி

(8ஆம் பக்கம் பார்க்க)

## - வட-கிழக்கு மாகாண -

## தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிற்கும் இடையே விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் வடக்கு-கிழக்கு நிலைமைகள் குறித்து மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலகர்கள் தேர்தல் ஆணையாளர்க்குத் தெரிவுபடுத்தியதாக உதவி தேர்தல் ஆணையாளர் கே. சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தன்னாட்சி அதிகாரசபை கோரிக்கையை பேரினவாதிகளால் ஜீரணிக்க முடியவில்லை

### திருமலை கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர்

(திருகோணமலை)

விடுதலைப்புலிகள் தங்களது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவைச் சமர்ப்பித்திருக்காவிட்டால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் வந்திருக்காது. விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்வரைவைச் ஜீரணிக்க முடியாத பேரினவாத சக்திகளின் தூண்டுதலினாலே பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்றது- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன் திருகோணமலை நகரில் பத்தாம் குறிச்சியில் கடந்த வியாழன் இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திருகோணமலை விவேகானந்த மீனவ கூட்டுறவுச் சங்க முன்றலில் கூட்டம் நடைபெற்றது. வேட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் வருகையால் வவு.வில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(செட்டிகுளம்)

வவுனியாவுக்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வருவதால் நேற்று வவுனியாவில் பொலிசார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தனர். தேர்தல் பிரசாரத்திற்காக வரும் ரணில் விக்கிரமசிங்க காலை 9.30 மணிக்கு நகரசபை திறந்த வெளியரங்கில் தனது கட்சிக்காக பேசவுள்ளார். இவரின் வருகையை அடுத்து நேற்றுமாலை பலநூற்றுக் கணக்கான பொலிசார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகான ஒத்திகை பார்க்கப்பட்டது. (21)

## இந்திய அகதி முகாமிலிருந்து கொழும்பிற்கு ஏமாற்றி அழைத்துவரப்பட்ட

## 12 தமிழ்ப் பெண்கள் தப்பிவந்தனர்!

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இலங்கையைச் சேர்ந்த பெண்கள் இந்திய அகதிமுகாம்களில் இருந்து அழைத்துவரப்பட்டு வத்தளை குணசிங்கபுர பகுதிகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை அங்கிருந்து தப்பிவந்து வவுனியாவில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரிடம் தஞ்சம் புகுந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் தஞ்சம் அடைந்த இந்தப் பெண்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் செய்து வருவதாகவும் இந்தியாவில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்வதாகவும் வவுனியா அரசியல்துறையினர் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தப்பிய பெண்களை சில நபர்கள் பிடிக்க முனைந்தவேளை ஒருவர் மக்களால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பெண்களின் கடத்தலுடன் ஒரு குடும்பத்தின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.முன்னணிக்கு எதிராக பொலிசார் செயற்படுகின்றனர்

### தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து உரையாடியது.

இதன் போது, தமது முன்னணிக்கு எதிராக பொலிசார் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் முறைப்பாடுகளை சமர்ப்பித்தனர்.

வெலிகடைப் பொலிசார் கடந்த புதன்கிழமை தாம் செய்த முறைப்பாடு தொடர்பில், உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என முன்னணியின் சார்பில் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த விமல் வீரவன்ச சுட்டிக்காட்டினார். அதேநேரம் வலப்பனை மற்றும் தம்புள்ள பொலிசாரும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவான செயற்பாட்டை மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் நடந்த கோர விபத்தில் உந்துருளிப் பயணிகள் இருவர் பலி!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இருவர் பலியாகினர். பயணிகள் பேருந்துடன் உந்துருளி மோதியதில் உந்துருளியில் பயணம் செய்த இருவரும் மரணமாகினர்.

பிற்பகல் 4.15 மணியளவில் கரடிப் போக்குச் சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற இவ்விபத்தில் உந்துருளியின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஈஸ்வரச்சந்திரன் (வயது-67) என்பவர் அவ்விடத்திலேயே மரணமானார். உந்துருளியை ஓட்டிச் சென்ற

(8ஆம் பக்கம் பார்க்க)



## எரிக்சூல் கெய்ம்-சம்பந்தன் நாளை சந்தித்துப் பேச்சு

தமிழ்க் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் நாளை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் கெய்மை சந்தித்துப் பேசவுள்ளார். அவர் இதன்போது வடக்கு கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை குறித்தும் விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டுப்பகுதியில் தேர்தல் நடத்துவது தொடர்பாகவும் பேசவுள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்தவாரம் யாழ்.இல் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள், ஊர்வலங்கள் என்பனவற்றில் இவர் கலந்துகொள்ளவுள்ளார். இதே வேளை இம்மாத இறுதியில் ஐந்து மாவட்டங்களிலும் பாரிய பிரச்சாரங்கள் இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை மகேசன் அ.அ.இல.353401238V என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளி. சந்தையடி மல்லிகா உணவகத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (3539)

### மெய்வல்லுநர்போட்டி

புதுக்குடியிருப்பு, கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மைதானத்தில் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார்.

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திருமதி ஞா.கனகையா கலந்துகொள்ளவுள்ளார் எனவும் தெரிவித்தார். (20)

# இந்திய மீன்பிடிப்படகுகளால் தொடர்ந்து தலைமன்னார் மீனவர்களுக்குத் தொல்லை

தலைமன்னார் மீனவர்களுக்கு இந்திய மீன்பிடிப் படகுகள் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டே வருகின்றன. இதனால் தலைமன்னார் கிராமத்தில் அறுபதிற்கு மேற்பட்ட மீன்பிடிக் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தாயக எல்லைக்குள் அவர்கள் அத்துமீறி வந்து திங்கள்,புதன், வெள்ளி என நாட்கள் குறித்து வந்து எம் செல்வத்தை அள்ளியள்ளிச்செல்கின்றார்கள். இது எமது உரிமையைப் பறிப்பதற்குச் சமன் எனக்கூறி தலைமன்னார் மீன்பிடி ஏழைக்குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மன்னார் மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகளுக்கும் மீனவர் சங்கங்களுக்கும் தமது கவலையையும் தெரிவித்துள்ளன. (மி)

# மட்டு.ஐ.தே.க.வேட்பாளர்கள் கொழும்பிற்கு அழைப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை நாளை கொழும்புக்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப்பீடம் அழைத்துள்ளது. மட்டு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களில் இதுவரை நான்குபேர் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### முதலிடம்

(மன்னார்)

மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் இவ்வாண்டு நடத்தப்பட்ட விஞ்ஞானப் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. (மி)

# தமிழ்க் கூட்டமைப்பினர் மன்னாரில் பிரச்சாரக் கூட்டம்

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு நேற்று மன்னாரில் தமிழ்க் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்தில்,

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் தமிழ்க் கூட்டமைப்பில் தேசியப்பட்டியலில் இடம் பெறுபவருமான அ. மகாசிவம் அவர்கள் சமூகம் கொடுத்து ஒரு தேர்தல் பரப்புரை நடத்தினார். இதில் பல ஆசிரியர்கள் அதிபர்கள் பல கல்விமான்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர் பேசுகையில், இந்தத் தேர்தல் எமக்கு மிகவும் முக்கியமான தேர்தல் என்றும் தமிழனின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் தேர்தல் என்றும் எனவே அனைவரும் ஒன்று திரண்டு ஒரே முகமாக வீட்டிற்குப் புள்ளடி போடுமாறு வேண்டிக் கொண்டார். (மி)

# புலிகளே ஏக பிரதிநிதிகள் என்பதை தேர்தல் மூலம் பறைசாற்ற வேண்டும்

## யாழ். வர்த்தகர் சமூகத்தினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் மட்டுமே என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தலூடாக சர்வதேச அரங்கில் பறைசாற்றுவதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட மன உணர்வுடன் ஓரணியில் திரள வேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட வர்த்தக சமூகத்தினர் கூட்டாக இணைந்து அறைகூவல் விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களினுடைய விடுதலைக்காக நீண்ட பெரும் பயணத்தை மேற்கொண்டு ஆயுத வழியில் போராடி வெற்றிகண்ட புலிகள் சனநாயக வழியில் இவ் வெற்றியை சுதந்திரமாக்குவதற்கு முயற்சித்து வருகிறார்கள். இதற்காக தமிழரது அபிலாசைகளுக்கு அமைவாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குப் புலிகள் தம் முழு ஆதரவையும் வழங்கி வருகின்றனர்.

எனவே புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்று அவர்களின் இன விடுதலைக் கொள்கைகளுக்கு அமைவாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பினர்க்கு மக்கள் வழங்கும் முழுமையான ஆதரவே தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்ற உண்மையை சர்வதேச அரங்கில் பறைசாற்றும் எனச் சுட்டிக்காட்டும் இவ் அமைப்பு தாமும் தமிழ் மக்களது பிரதிநிதிகள் எனக் கூறி வரும் தேசத் துரோகிகள் எதிர் வரும் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட வேண்டும். இதுவே புலிகள் மட்டுமே தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகள் என்பதை உலகறியச் செய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (33)

# உப மருந்தாளர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பம்

தனியார் வைத்திய நிலையங்கள், மருந்தகங்களில் மருந்துகளை விற்பனை செய்பவர்கள் அல்லது உரிமையாளர்கள் போதிய மருந்தியல் சம்மந்தமான அறிவு காணாமையினால் மருந்துகளை விற்பனை செய்யும்போது நோயாளர்கள் அல்லது மருந்துகளை பெறுபவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே அங்கு பணியாற்றுபவர்களுக்கு மருந்தியல் சம்மந்தமான ஒரு அறிவைக் கற்பித்து நோயாளர்கள் பாதிக்காத வகையில் பணியாற்ற வேண்டும் என்பதற்காக உபமருந்தாளர் பயிற்சி நெறியொன்றை தமிழீழ சுகாதார சேவையினர் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளனர். இப்பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளி. மாவட்ட மா.சு.சே.பி.பணிப்பாளர், நல வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர், மற்றும் கற்பித்தலினை மேற்கொள்ளவிருக்கின்ற மருந்தாளர்கள் மற்றும் மாணவர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். இப் பயிற்சி நெறி வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற இருக்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும.

# யாழ். கலட்டிப் பகுதியிலிருந்த இராணுவ முகாம் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கலட்டிப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட்டு அப்பகுதி மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டுமுதல் மேற்படி பகுதியில் முகாம் ஒன்றை நிறுவி தங்கியிருந்த படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளினால் யாழ். பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில் நுட்பக கல்லூரி பல்கலைக்கழக மாணவர் விடுதிகள் என்பவற்றின் இயல்பான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

மேற்படி கல்விஸ்தாபனங்களுக்கு நெருக்கமாக இம் முகாம் அமைந்துள்ளமை மாணவர்களின் இயல்பான கற்றல் சூழலைப்பாதித்திருப்பதாகச் சுட்டிக்காட்டி பலத்த கண்டனக்குரல்கள் எழுப்பப்பட்டு வந்ததைத் தொடர்ந்து கடந்த வாரம் இம் முகாமைப் படையினர் அகற்றியுள்ளனர்.

இம்முகாம் அகற்றப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வி இயல்பான நிலையில் தொடரச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதுடன், படை முகாமினால் உள்வாங்கப்பட்டிருந்த 15ற்கும் மேற்பட்ட வீடுகளும் 6கடைத் தொகுதிக்கட்டடங்களும் விடுவிக்கப்பட்டுள்ளன. (33)

### நூல்வெளியீடு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான "மாண வர் வாழ்வில் திருக்குறள்" நூல் வெளியீட்டுவிழா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதியன்று காலை 10.30மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் சங்கத்தலைவர் வே.பரம நாதபிள்ளை தலைமையில் நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. அரச அதிபர் திஇராச நாயகம் மற்றும் சிறப்பு விருந் தினர்களாக கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கரைச்சிப் பிரதேச செயலர் யோன். நித்தியானந்தம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (சோ)

### நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளை அதன் நடமாடும் வங்கிச் சேவையினை நாளை முதல் தினமும் முல்லைத்தீவு நகரில் மேற்கொள்ளவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் பகல் 12.00 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி சேவையின்போது, சேமிப்புக்கணக்குத் திறத்தல், கணக்கு வைப்புச் செய்தல், சேமிப்பு மீளப் பெறல், ஓய்வூதியக் கொடுப்பனவு, அடகு நகை மீளல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளதென முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கப்படும்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2005ஆம்ஆண்டு முதல் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு வியாழக்கிழமை கூறியுள்ளார்.

புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகவும், இதற்கான பிரேரணை கடந்த வருடம் அக்டோபர் மாதம் 31ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும், அமைச்சர் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

# நகரப்பிரதேச முன்பள்ளிகளின் புதிய நிர்வாகசபைத் தெரிவு

வவுனியா தெற்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வவுனியா நகரப் பிரதேசத்திற் கான இவ்வாண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் கலைமகள் மண்டபத்தில் வவுனியா தெற்கு வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசபாலன் தலைமையில் இடம் பெற்றது.தலைவராக எஸ்.சுதாகரன, உபதலைவராக வீ.ரதீஸ்வரி, செயலாளராக த.அசோக்குமார், உபசெயலாளரா க.த. கோகிலராணி, பொருளாளராக சி.வசந்தா, நிர்வாக உறுப்பினர்களாக பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# வர்த்தக, பணியாளர்சங்க அங்கத்தவர் கலந்துரையாடல்

கிளிநொச்சி பிரதேச வர்த்தக சங்கம், பணியாளர் சங்கத்தினருக்கான முக்கிய கலந்துரையாடல் நேற்று கிளி/கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கணேசகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் சமகால அரசியல் நிலை தொடர்பான விளக்கவுரையினை அரசியல் துறையைச் சேர்ந்த சஞ்சேய், அரசியல்துறையைச் சேர்ந்த பாரிமகன், தமிழீழ நிர்வாகசேவை கிளி/மாவட்டப் பொறுப்பாளர் செ.முரளி, கிளி/பிரதேச வர்த்தக சங்க செயலாளர் நவரத்தினராசா, வர்த்தகசங்கத் தலைவர், கணேசகுமார் ஆகியோர் ஆற்றினர். மேற்படி நிகழ்வில், கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.நிருபன், கிளி/மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் [illegible]பூவிழி, கிளி/நகர் வலயப்பொறுப்பாளர் திருமாறன், பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உடற்பயிற்சிப் போட்டியில் யோகபுரம் ம.வி. முதலிடம்

2004ஆம் ஆண்டிற்கான துணுக்காய் கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டி கடந்த 09.03.2004 ஆம் திகதி மல்லாவி மத்திய கல்லூரியில் கோட்டக்கல்வி அலுவலர் ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. ஆண், பெண் இரு அணிகளிலும் மு/யோகபுரம் மகாவித்தியாலயம் 01ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது என துணுக்காய் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.விஜயபாலா தெரிவிக்கின்றார். (24)

## சாவு அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை அல்பிரட் [ராசு]

முல்லைத்தீவு-இரணைப்பாலையைச் சேர்ந்த திரு.அந்தோனிப்பிள்ளை அல்பிரட் (ராசு) நேற்று (13.03.2004) அன்று காலமாகிவிட்டார்.

இவர் சறோசாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற திரு.அந்தோனிப்பிள்ளை, திருமதி அஞ்சலீனம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செலஸ்ரீன், மனுவேற்பிள்ளை (துரைமணி) யோசேப்பு (ஐயா), கில்பேட், இருதயநாயகி (லீலா) (லண்டன்) அல்போன்ஸ் (ஜேர்மனி), அருட்தந்தை அகஸ்ரீன் (வட்டக்கச்சிப் பங்குத்தந்தை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தைஅகஸ்ரீன்
பங்குத்தந்தை
வட்டக்கச்சி.

(3546)

# இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினையைத் தீர்க்க பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்

## ஐ.நா.பொதுச் செயலாளர் வலியுறுத்து

**இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நெருக்கடிக்குத் தீர்வு காண தன்னிச்சையாக எடுக்கப்படும் முடிவுகள் வன்செயல்களைத் தூண்டுவதாகவே அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கின் சமாதானத்திற்கென அமெரிக்காவின் ஆதரவில் தயாரிக்கப்பட்ட இத்திட்டம் தோல்வி அடையும்பட்சத்தில் கைப்பற்றப்பட்ட காசா பிரதேசத்தில் இருந்து இஸ்ரேலியத் துருப்புக்களையும் குடியேற்ற வாசிகளையும் திருப்பி அழைப்பதென பிரதமர் ஏரியல் ஷரோன் தன்னிச்சையான திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்.

ஆனால் அமெரிக்காவின் ஆதரவினாலான திட்டத்தின் கீழ் பலஸ்தீன இராச்சியம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முயலும் முயற்சிகளுக்கு இத்திட்டத்தினால் நிலம் இல்லாமல் போய்விடும் என்றும் பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இப்பிராந்தியத்தில் மிக மோசமான வன்செயல்கள் இடம்பெறுவதால் அமெரிக்கா ஆதரவினாலான சமாதானத்திட்டம் அமுல் செய்ய முடியாத நிலையில் உள்ளது.



பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சேதமடைந்த ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல். இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.



ஸ்பெயின் தலைநகரில் நடைபெற்ற பாரிய குண்டு வெடிப்பிற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்று அங்கு நடைபெற்ற 23லட்சம் பேர் பங்கேற்ற மக்கள் பேரணி. இந்தத் தாக்குதலில் 192பேர் உயிரிழந்ததுடன் 1400க்கும் அதிகமானோர் காயமடைந்தமையும் தெரிந்ததே.

# காதீர்கானின் பொதுமன்னிப்பை பரிசீலனை செய்ய நிர்ப்பந்தம்

பாகிஸ்தானின் விஞ்ஞானி தீயநாடுகள் என அமெரிக்காவால் வர்ணிக்கப்படும் ஈரான்,லிபியா, வடகொரியா போன்ற நாடுகளுக்கு அணுஆயுத ரகசியங்களைத் தெரியப்படுத் தியுள்ளார். இவருக்கு பொதுமன்னிப்பை முஷாரப் வழங்கிய நட வடிக்கை அமெரிக்காவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இந்த பொது மன்னிப்பை வழங்கியுள்ள பாகிஸ்தான் சனாதிபதி, விசாரணையில் காதீர்கான் ஒத்துழைக்காத போது அதனை வாபஸ் பெறவேண்டும். வேறு தண்டனை வழங்கவேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல் கூறியுள்ளார்.

# சர்ச்சைக்குரிய இஸ்ரேலிய தடுப்புச் சுவரின் ஒருசிறு பகுதியைக் கைவிட ஷரோன் முடிவு

## - அமெரிக்காவை திருப்திப்படுத்த முயற்சியாம்

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அமெரிக்காவை திருப்திப் படுத்தும் முயற்சியில் சர்ச்சைக் குரிய மேற்குக்க ர தடுப்புச் சுவரில் 170 கிலோமற்றரை குறைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக சிரேஷ்ட அரசியல் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி மொத்தம்720 கிலோ மீற்றர் நீளமான தடுப்புச்சுவரில் 170 மீற்றரை குறைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

முட்கம்பிகளாலும் கொங்கிறிட்டாலும் இந்தத் தடைச்சுவர் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை 180 கிலோ மீற்றர்வரையிலான தடைச்சுவரை அமைக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

தற்கொலைக் குண்டுதாரிகள் இஸ்ரேலியப் பிராந்தியத்திற்குள் நுழைவதைத் தடுப்பதற்காக யூத குடியேற்றங்களைச் சுற்றி இந்தத் தடைச்சுவர் கட்டப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# தென்கொரியாவில் நெருக்கடி தொடர்கின்றது தற்காலிக சனாதிபதியாக கோகும் நியமனம்

(சோல்)

வாஷிங்டனுடனான உறவை தமது அரசு தொடர்ந்து பின்பற்றும் என்றும் வடகொரியாவின் அணு வாயுதத் திட்டம் தொடர்பான கொள்கை தொடர்ந்து கடைப் பிடிக்கப்படும் என்றும் தென்கொரியாவில் புதிதாக தற்காலிக சனாதிபதியாக பதவியேற்றுள்ள கோகும் அவ்வாறு கூறியுள்ளார்.

நாடெங்கிலும் உள்ள மக்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் அதேநேரம் தென்கொரிய சனாதிபதி றோமூன்கியூனை தேசிய சட்டப் பேரவை நேற்று முன்தினம் சனாதிபதி பதவியிலிருந்து நீக்கியுள்ளமை அரசியல் சட்டப்படி செல்லுபடியாகுமா என்று உடனடியாக தீர்ப்புக் கூறுமாறு அரசியல் சட்ட நீதிமன்றத்தை தற்காலிக சனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நீதிமன்றம் இந்தத் தீர்மானம் சரியானது என்று தீர்ப்பளித்தால் தென்கொரியா அடுத்துவரும் 60 நாட்களுக்குள் புதிய சனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும்.

# ஈராக்கில் அமெ. நிர்வாகத்திற்கு உதவிய மூவர் படுகொலை!

ஈராக்கில் இரண்டு அமெரிக்கர்களும் ஒரு ஈராக்கியரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் தலைமையிலான நிர்வாகத்திற்கு வேலை செய்த இரண்டு அமெரிக்க சிவிலியன்களும் ஒரு ஈராக்கிய மொழி பெயர்ப்பாளருமே கொலைசெய்யப்பட்டவர்களாவர். இதேவேளை இக்கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் நான்கு ஈராக்கியப் பொலிசார் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## மனித வடிவில் 'ரோபோ' அறிமுகம்

ஜப்பான் முதன் முறையாக மனிதவடிவிலான ரோபோவைத் தயாரித்துள்ளது.



சுமார் 3 அடி உயரமான இவ் ரோபோ இசைக்கருவிகளை யாருடைய உதவியும் இன்றி தானே இசைக்கும் திறனுடையது. அத்துடன் யாருடைய உதவியும் இல்லாதவர்களுக்கு இவ் ரோபோ துணையிருக்குமென கூறப்படுகிறது. டோக்கியோவில் நடை பெற்ற நிகழ்வொன்றின் போது இவ் ரோபோ அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களுக்கு சொத்துரிமை தடை; சர்ச்சைக்குரிய பிரேரணை ஒத்திவைப்பு

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் சட்ட மன்றப் பேரவை பெண்களுக்கான சொத்துரிமைக்குக் கட்டுப்பாடு விதிக்கும் சர்ச்சைக்குரிய பிரேரணையை நிறைவேற்றாமல் காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளது.

வேற்று மாநிலத்தவரை மணம் புரியும் ஜம்மு-காஷ்மீர் பெண்களுக்கு சொத்துரிமையை மறுக்கும் பிரேரணை அண்மையில் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் பிரச்சினைக்குரிய பிரேரணை சட்டமன்ற மேலவையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அரசியல் சட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்ட பின்னரே இப் பிரேரணையை நிறைவேற்ற முடியும் என்று கோரி மேல்சபைத் தலைவர் அப்துல் ரஷீத், அவையைக் காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளார்.

முப்தி முகமது அரசுக்கு ஏற்பட விருந்த தர்மசங்கட நிலையைத் தவிர்க்கவே அது ஒத்தி வைக்கப் பட்டதாக தேசிய மாநாட்டுக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

எனவே மேலவை தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாகவும் அக்கட்சி கூறியுள்ளது.

### திரணாமுல் காங்கிரசுடன் ஷன்மா குழு இணைவு

(புதுடில்லி)

முன்னாள் மக்களவை சபாநாயகர் பி.ஏ. ஷன்மா தலைமையிலான தேசியவாத காங்கிரஸ்கட்சியிலுள்ள ஒரு குழுவினர் நேற்று திரணாமுல் காங்கிரசுடன் இணைந்துவிட்டது. புதிய கட்சிக்கு தேசிய திரணாமுல் காங்கிரஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை நேற்று டில்லியில் பி.ஏ.ஷன்மாவும், மம்தா புனார்ஜியும் அறிவித்துள்ளார்கள்.

# கெயிட்டியில் பிரதமராக ஜெரால்; பலத்த பாதுகாப்பிடையே பதவியேற்பு

கெயிட்டி நாட்டின்பிரதமராக ஜெரால் தலைநகர் போட்டோ ஓபிறின்சில் நேற்று பலத்த பாதுகாப்புக்களுடன் பதவியேற்றுள்ளார்.

நாடு கடந்து அமெரிக்காவில் வசித்து வந்த ஜெரால் கடந்த புதன் கிழமை கெயிட்டி சென்றடைந்தார்.

நேற்று பதவியேற்றுள்ள ஜெரால், பிளவுபட்டுள்ள கெயிட்டி சமுதாயத்தை ஒன்றிணைக்கப் போவதாகவும், ஒவ்வொரு டொலரையும் புத்திசாலித் தனமாகச் செலவிடப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை டொமினிக்கன் குடியரசில் சிறை வைக்கப்பட்டுள்ள கெயிட்டி நாட்டவர் விடுவிக்கக் கோரி 36 டொமினிக்கன் வியாபாரிகளை கெயிட்டி கிளர்ச்சியாளர்கள் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துள்ளார்கள்.

### குற்றவாளிகள் தப்பியோட்டம்

(புதுடில்லி)

இந்தியாவின் பீகாரில் நேற்று முன்தினம் இரவு பட்னாக் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையிலிருந்து 80 இளம் குற்றவாளிகள் தப்பித்துச் சென்றுள்ளார்கள்.

இவர்கள் பாதுகாப்புக் கடமையிலிருந்தவரிடமிருந்து சாவிகளைப் பறித்துக் கொண்டு தப்பி ஓடியதாகக் கூறப்படுவதால்,

அன்று பணியிலிருந்த நான்கு பொலிஸ்காரர்கள் உட்பட ஏழுபேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு வைகோவால் நிராகரிப்பு

(சென்னை)

தமிழக மக்களின் நலனை தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் பாதுகாக்கத்தவறிவிட்டதென முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ள குற்றச்சாட்டை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மறுத்துள்ளார்.

அத்துடன் இரு கட்சிகளும் தேசிய சனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த வரை தமிழக மக்களின் நலன் பாதுகாக்கப்பட்டதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த வியாழனன்று கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# இந்தியா-பாகிஸ்தான் அமைதி முயற்சிகள் முன்நோக்கி நகர அமெரிக்கா பாடுபடும்

## இந்தியா வரும் கொலின்பவல் கருத்து

இந்தியாவும்,பாகிஸ்தானும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள அமைதியுடன் தொலைநோக்குடனும் நடவடிக்கைகள் எடுத்திருப்பதை முன்னிட்டு அமெரிக்கா பாராட்டியுள்ளது.

இருநாடுகளின் தரப்பிலும் அமைதிக்குப் பாடுபடுபவர்களுக்கு அமெரிக்கா உற்ற நண்பனாக பாடுபடும் என்று புதுடில்லியில் நடைபெற்று வரும் இந்தியாருடே ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் கருத்தரங்கிற்கு அனுப்பியுள்ள செய்தியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியாவும் பாகிஸ்தானும் மேற்கொண்டுள்ள அமைதி முயற்சிகள் இருநாட்டு மக்களுக்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை கொலின்பவல் இந்தியாவுக்கு இரண்டுநாள் பயணமாக நாளை வருகின்றார். புதன்கிழமை பாகிஸ்தான் செல்லவுள்ளார்.

# “இந்தியாவின் அடுத்த பிரதமர் வாஜ்பாய்தான்” கருத்துக்கணிப்பு...

இந்தியாவின் அடுத்த பிரதமர் யார் என்பதை ஏப்ரல் 26இல் ஆரம்பமாகி மே10வரையானவாக்களிப்பே நிர்ணயிக்கப் போகின்றது. இதேவேளை மீண்டும் பிரதமர் வாஜ்பாய் தான் என்பதை தேர்தலுக்கு முன்னர் நடத்தப்பட்டுள்ள கருத்துக் கணிப்புக்கள் எடுத்தியம்பியுள்ளன.



இந்தக் கருத்துக் கணிப்புக்கள் “தேசத்தின் மனநிலை அறிதல்’’ எனும் பெயரில் இந்திய தேசம் முழுவதுமே நடத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் காங்கிரஸ் தனது மத்தியில் ஆட்சியமைக்கும் எனும் கனவை கலைத்துக் கொள்ள வேண்டியது தான் எனும் நிலையும் உருவாகியுள்ளது.

ஊழல்,வேலையின்மை, வறுமை என்பவற்றையே காங்கிரஸ் தமது பிரச்சாரத்தில் கடைப்பிடிக்கும் விடயங்கள். ஆனால் இவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் வகையில் தான் கருத்துக் கணிப்புக்கள் உள்ளன.

காங்கிரஸ் கட்சியின் 119வருட வரலாற்றில் இம்முறை பலமாக காங்கிரஸ் வீழ்ச்சியை எதிர் நோக்கும். இம்முறை 105-115 இடங்களே காங்கிரஸிற்குக் கிடைக்கும். பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி 330-340 இடங்களைத் தனதாக்கிக்கொள்ளும். என்பது கருத்துக் கணிப்பு எடுத்துக்கூறும் விடயங்கள்.

இவ்வாறு பாரதிய ஜனதா வெற்றி பெறுவதானால் என்ன காரணம் இருக்க முடியும் என்றும் நாடிபிடித்துப் பார்க்கப்பட்டுள்ளது.


அந்தவகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் வடக்கிலும் கிழக்கிலும் காங்கிரஸிற்கு ஆதரவு இருந்தது. வடக்கில் 3.38சதவீதம், கிழக்கில் 4.17 சதவீதம மேலதிக வாக்கு வீதங்களாக இருந்தது. ஆனால் தற்போதைய கணிப்புக்களின்படி தே.ஜ.கூட்டணிக்கு ஆதரவு அலை அடிக்கத் தொடங்கியுள்ளது.

வடக்கில் 3.94 சதவீதம், கிழக்கில் 2.89 சதவீதம், மேற்கில் 4.84 வீதம் மேலதிக வாக்குகளாக காங்கிரஸ் காற்று தே.ஜ.கூட்டணியின் பக்கம் மாறி வீசுவதைக் காட்டுகின்றது.

இதற்குக் காரணம் இல்லாமலில்லை கடந்த டிசம்பரில் நடந்த தேர்தலில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களை பாரதிய ஜனதா தன்வசமாக்கிக் கொண்டுள்ளது என்பதும் ஒருகாரணம்.

அடுத்து, பொருளாதார வளர்ச்சியும் பாரதிய ஜனதாவை வெற்றிப் பாதையில் வீறுநடை போடவைக்கத்தவறவில்லை.

தற்போதைய நிலையில் அன்னியச்



ஜெயிக்கத் துடிப்பவர்: சோனியாகாந்தி

செலாவணி இருப்பு 103 பில்லியன் டொலர்கள்; பங்குச்சந்தை அட்டவணை 6ஆயிரம் புள்ளிகளைத் தாண்டியுள்ளது; மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7-7.5 சதவீதத்தைத் தொடவுள்ளது; 30 ஆண்டுகளில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்து மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என்றும் புள்ளிவிபரங்கள் கணக்கிட்டுள்ளன.

அடுத்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையகம் மூவாயிரத்து 577 கிலோ மீற்றர் நெடுஞ்சாலைகளை அமைத்துள்ளது. கடந்த மாதம் வரை 75ஆயிரம் கிராமங்கள் பிரதமர் வாஜ்பாயின் கிராம சாலைத் திட்டம் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் 44 சதவீத மக்கள் நன்று எனவும் 21 சதவீத மக்கள் சராசரி எனவும் கூறியுள்ளார்கள்.

இதேவேளை கிராமப்புறசாலை இணைப்புத் திட்டத்தினால் 18 கோடி மனித நாட்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும்.



எனவே காங்கிரஸ் கூறும் வேலை வாய்ப்பின்மை எனும் குற்றச்சாட்டு இத் திட்டம் மூலம் அடிபட்டுப்போகின்றது.

இதேபோல் தேசிய நதிகள் இணைக்கும் பிரதமரின் முன் முயற்சிகளுக்கு 70 சதவீதமான மக்கள் ஆதரவு வழங்குகின்றார்கள். விவசாயம் மேன்மையுறும் வழிஇது என்பது அவர்களுடைய ஆதரவுக் குரலுக்குரிய காரணம்.

இதேபோல் வாஜ்பாய் வயதானவர். ஆனால் இளைஞர்கள் அவரைத்தான் பிரதமராக வரவேண்டும் என்று கூறுகின்றார்கள். 18-24 வயதுப் பிரிவினர், 25-44 வயதுப் பிரிவினர், சோனியாகாந்தியை விட, வாஜ்பாய் தான் பிரதமராக வரவேண்டும் என்று கருத்துக் கூறியுள்ளார்கள்.

மறுபுறம் 45 வயதுக்கு மேற்பட்டவர்களே காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை விரும்புகிறார்கள்.

இதேவேளை இந்திய மக்கள் தொகையில் 30 சதவீதமானவர்கள் 18-35 வயதுக் குட்பட்டவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சி மங்கி மறையும் என்றும், பாரதிய ஜனதா கட்சி ஒளிவிடும் கட்சியாகவும் மாறிவிடும் என்றே கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

அ.கலைவாணி

ஆரம்பகாலங்களில் காங்கிரஸ் கட்சி கிராமப் புறங்களில் தனது செல்வாக்கைப் பெற்றிருந்தது. பாரதிய ஜனதா நகர்ப்புறக் கட்சி என்றும் ஆண்கள் கட்சி என்றும், காங்கிரஸ் கிராமப்புறக் கட்சி என்றும், பெண்கள் கட்சி என்றும் வர்ணிக்கப்பட்ட காலமும் இருந்தது.

இப்போது எல்லாமே மாறிவிட்டது. கிராமம் முதல் நகரம் வரை ஆண்கள், பெண்கள் அனைவருமே பாரதிய ஜனதாவுக்குத் தான் ஆதரவுக்குரல் கொடுக்கின்றார்கள்.


மறுபுறம் இதையே திருப்பிப் பார்த்தால், படிப்பறிவற்றோர், கல்வியறிவு குறைந்தோர், மிதமான கல்வியறிவுடையோர், உயர் கல்வி பெற்றோர் அனைவருமே காங்கிரஸைவிட கூடுதலானவர்கள் பாரதிய ஜனதா கட்சியையே ஆதரிக்கின்றார்கள்.

நிச்சயம் இதற்குக் காரணமில்லாமலில்லை ஏதோ நடந்துதான் உள்ளது. அது பிரதமர் வாஜ்பாயின் பொருளாதாரம் சார்ந்த கொள்கைதான்!

கொள்கையுடன் மட்டும் நின்று விடாது அவற்றைச் செயற்படுத்திக் காட்டியதுமே. மின்வசதிகள், சாலைகள் புனரமைப்பு, குடிநீர்வசதி தொலைபேசி வசதிகள், விரிவுபடுத்தல், மருத்துவ முன்னேற்றம் கல்வியறிவு வளர்ச்சி, கல்விக்கான வசதிகள்,புகையிரத சேவைகள் விருத்தி பஞ்சாயத்துமுறை ஒழிப்பு,பாதுகாப்பு முன்னேற்றம்... என்பன முதலானவற்றை மத்தி யரசு செய்துள்ளது என்பது மக்களின் கருத்து.

ஆக.... இவற்றையெல்லாவற்றையுமே பாரதிய ஜனதா அறுவடை செய்யத் தயாராகியுள்ளது. இவை நல்ல பலனைத் தேர்தல் மூலம் வெளிக்காட்டும் என்பது அவதானிப்பு.

அதுமட்டுமன்றி பாகிஸ்தானுடனான உறவுகளும் வாஜ்பாயின் புகழ்பாடத் தவறவில்லை போல் உள்ளது. அதனால் தான் வாஜ்பாய் பாகிஸ்தானுடன் அமைதி முயற்சிகளை மேற்கொண்டது சரி என்று 50சதவீமானவர்கள் கூறியுள்ளார்கள் 38சதவீதமானவர்கள் சொல்ல முடியாது என்று கூறியுள்ளார்களே தவிர தவறு என்று கூறவில்லை.




அதாவது சண்டையிடும் பக்கத்து நாட்டுடன் கை கோர்ப்பது ஒரு பெரிய முன்னேற்றம், ஆதாயத்தை ஏற்படுத்தியுள்ள அமைதி என்றே கூற வேண்டியுள்ளது.

ஏனெனில் லாகூர் பேருந்து யாத்திரையும்,அதனையடுத்து ஏற்பட்ட போரையும், ஆக்ரா உச்சி மாநாட்டின் தோல்விகளையும் பின்தள்ளி மீண்டும் இஸ்லாமாபாத்துடன் உறவுகளை வாஜ்பாய் ஏற்படுத்தியமை மக்களிடம் பெரும் வரவேற்பை அள்ளிக் கொடுத்திருக்கலாம்.

இதேவேளை தமிழ்நாடு உட்பட ஏனைய மாநிலங்களில் கூட பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு நிலவுகின்றது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை முறியடிக்கும் விதமாக, பயங்கரவாதப் பிரச்சினைகளை சமாளிக்கப் பொடோ சட்டம் தேவை என்று 52 சதவீதமான மக்கள் கூறியுள்ளார்கள். அதிலும் 18-24 வயதுக் குட்பட்டவர்கள்தான் பொடோசட்டத்தை ஆதரிக்கின்றார்கள் என்பது ஆச்சரியமானதோர் விடயம்.

திடமாக 28 சதவீத வாக்குகளை கொண்டுள்ளது காங்கிரஸ். பாரதிய ஜனதாவின் பிரதமர் வாஜ்பாயிக்கு எதிரான திடமான வலுவான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் உருவாகும் என்று கூறமுடியும்.

அதேவேளை மறுபுறம் பிரதமர் வாஜ்பாய் தனது பதவிக்காலத்தில் காங்கிரஸ் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இந்தியாவை மாற்றியமைத்துவிட்டார். வாஜ்பாயிக்கு நிகரான தலைவர் காங்கிரஸ் கட்சியில் யார் இருக்கின்றார்கள்? எனும் வினா காங்கிரஸ் கட்சியோடு ஒட்டிக் கொண்டுதான் இருக்கின்றது.

அதனால்தான் இன்றுவரை காங்கிரஸ்கட்சி தமது பிரதமர் வேட்பாளர் யார் என்பதை அறிவிப்புச் செய்வதில் தயக்கம் காட்டி நிற்கின்றது. சோனியா காந்தியே பிரதமருக்கான வேட்பாளர் என்று கூறுவதில் காங்கிரஸ் கட்சியே பின் நிற்கின்றது.

ஆனால் பிரதமர் வாஜ்பாயே காங்கிரஸின் நல்ல கொள்கைகளையும், கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களையும் சூறையாடி வந்து மக்களிடையே வியாபாரம் செய்துள்ளார். அதனால் தான் மீண்டும் அவர் பிரதமர் ஆக முடியும் என்று மக்களின் கருத்துக் கணிப்புக்கள் கூறியுள்ளன.

நேரு கொள்கையின் முக்கிய கருப்பொருளாய் திகழ்ந்தது மதசார்பின்மை தான். ஆனால் வாஜ்பாய் இந்துத்துவா என்று முழங்கினார்.

ஆனால், இந்துத்துவாவை தூக்கிப் பிடித்துக் கொண்டு மற்றைய மதங்களையோ, கலாச்சாரத்தையோ அவமதித்ததாகவோ, புறக்கணிப்பு செய்ததாகவே நடந்து கொள்ளவில்லை.

இதனை முழுமையாக வெளிக்காட்டுவது அயோத்தி விவகாரம் தான். அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என்று முழங்குவார் வாஜ்பாய்.ஆனால் அது மேடைப் பேச்சுடன்தான் இதுவரை இருந்துள்ளது. விஸ்வ ஹிந்துபரிசட்டின் கருத்துப்படி, பிரதமரானகையுடன் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படத் தொடங்கியிருந்தால் இன்று அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருடங்கள் பல ஓடியிருக்கும் இது அவரது அரசியல் சாதுரியம் என்றும் வர்ணிக்கப்படுகின்றது.

இதேவேளை பிரதமராக வாஜ்பாய் நன்றாக செயற்பட்டார் என 45 சதவீத மானவர்களும் சராசரி என்று 29 சதவீதமான வர்களும் அடுத்த பிரதமர் அவர்தான் என்பதை 47 சதவீமானவர்களும் கூறியுள்ளார்கள்.

ஆனால் சோனியாகாந்தி எதிர்க்கட்சித் தலைவியாக நல்ல முறையில் செயற்பட்டார் என 38 சதவீதமானவர்களும்,அவர் பிரதமர் ஆகுவதற்கு தகுதியுடையவர் என 23 சதவீதமானவர்களுமே கூறியுள்ளார்கள்.

இதற்கு காரணம் சோனியா வெளிநாட்டுக்காரர் எனும் அச்சம் மக்கள் மனதை விட்டு விலகாமையே ஆகும். அத்துடன் அரசியல் அனுபவமில்லை. காங்கிரஸிற்குள்ளேயே அவருக்கு ஆதரவின்மை, இந்தியோ மற்ற மொழிகளிலோ சரியாக பரிச்சயமில்லாதது, நேரு குடும்பம் மற்றும் இன்னும் சொல்லத் தெரியவில்லை ஆனால் சோனியாகாந்தி பிரதமராக வருவது பிடிக்கவில்லை. என்றும் ஒரு சாரார் கூறுகின்றார்கள்...என்பன சோனியா காந்தி பிரத மராகுவதற்கு உள்ள தடைகளாக உள்ளன.

இதேவேளை, அரசியலுக்குள் ராகுல் காந்தியும், பிரியங்காவும் இழுக்கப்பட்டுள்ளார்கள். சோனியா காந்தி பிரதமர் வேட்பாளர் என்பதைவிட ராஜிவ்காந்தியின் பிள்ளைகள் பிரதமர் வேட்பாளராக முன் நிறுத்தப்பட்டால் கருத்துக்கணிப்புக்கள் முழுவதுமே தலைகீழாகவும் மாறிவிடலாம்.

அதற்கு சோனியாகாந்தி முன் வரவேண்டும் அதற்கும் மேலாக வாஜ்பாயின் பழுத்த அரசியல் தந்திரோபாயங்களை முறியடிக்கும் வகையில் எதிர்க்கட்சியில் ஒருவர் உருவாக வேண்டும் அல்லாதபட்சத்தில் வாஜ்பாய்தான் மீண்டும் பிரதமர் ஆக முடியும்

# இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத் தேர்தலும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் முறையும்

இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார பட்டியல் முறையின் கீழ் தெரிவு செய்யப்படுகின்றனர். இம்முறையில் இரண்டு பட்டியல்கள் இடம் பெறும்.

01. சாதாரணப்பட்டியல்

02. தேசியப்பட்டியல்

இம்முறையின் கீழ் இலங்கையிலுள்ள 25 நிர்வாக மாவட்டங்களும் 22 தேர்தல் மாவட்டங்களாக கொள்ளப்படுகின்றன.(யாழ்-தேர்தல் மாவட்டம்- யாழ், கிளிநொச்சி) வன்னித் தேர்தல் மாவட்டம் (மன்னார், வவுனியா, முல்லைத்தீவு) இம்முறைக்கு பின்வரும் அம்சங்கள் முக்கியமானதாகும்.

01. ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் பலஅங்கத்தவர் தொகுதியாக இருக்கவேண்டும்.

02. வாக்காளன் தான் விரும்பும் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவிற்கு வாக்களித்த பின் அந்தக் குழுவில் இடம்பெறும் பட்டியலில் மூன்று வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கைத் தெரிவிக்கலாம்.

03. ஒருதேர்தல் மாவட்டத்தில் மிகக் கூடிய பெரும்பான்மையான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு ஒரு போணஸ் ஆசனம் வழங்கப்படும். மிகுதி ஆசனங்கள் வாக்குகளின் விகிதாசாரப்படி பகிரப்படும்.

04. ஒரு தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவிருக்கும் பிரதிநிதிகளின் தொகையுடன் மூன்று உறுப்பினர்களைக் கூடுதலாகக் கொண்ட பட்டியலை ஒவ்வொரு கட்சியும் சுயேட்சைக் குழுவும் சமர்ப்பிக்க வேண்டும்.

05. ஒரு தேர்தல் மாவட்டத்தில் 5%க்கும் குறைவான வாக்குகள் பெறும் கட்சி தேர்தலிலிருந்து நீக்கப்படும்.

06. காலத்துக்குக் காலம் மக்கள் கணக்கெடுப்பின் மூலம் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்குமான பிரதிநிதிகள் தொகை ஒதுக்கப்படும்.

07. தற்போது 1981ஆம் ஆண்டுச் சனத்தொகை அடிப்படையிலேயே பிரதிநிதிகள் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த அடிப்படையை எடுத்து நோக்கும் போது உறுப்பினர்கள் பட்டியல் பின்வருமாறு காணப்படும்.

| மக்களால் 22 தேர்தல் மாவட்டத்தின் மூலம் | ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பெறுகின்ற பெரும்பான்மைக்கு ஒரு போணஸ் ஆசனப்படி | தேசியப் பட்டியல் மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 174 | 22 | 29 | 225 |

இந்த வகையில் 02.04.2004 அன்று நடைபெறப் போகும் இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் இருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தொகை பின்வருமாறு. (தேசியப்பட்டியல் தவிர்ந்த)

| இல. | தேர்தல் மாவட்டம் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் தொகை | நியமனப் பத்திரத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை | சுயேட்சைக் குழுவினால் செலுத்தப்பட வேண்டிய வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 20 | 23 | 46,000 |
| 02 | கம்பஹா | 17 | 20 | 40,000 |
| 03 | களுத்துறை | 10 | 13 | 26,000 |
| 04 | கண்டி | 12 | 15 | 30,000 |
| 05 | மாத்தளை | 05 | 08 | 16,000 |
| 06 | நுவரெலியா | 07 | 10 | 20,000 |
| 07 | காலி | 10 | 13 | 26,000 |
| 08 | மாத்தறை | 08 | 11 | 22,000 |
| 09 | அம்பாந்தோட்டை | 07 | 10 | 20,000 |
| 10 | யாழ்ப்பாணம் | 09 | 12 | 24,000 |
| 11 | வன்னி | 06 | 09 | 18,000 |
| 12 | மட்டக்களப்பு | 05 | 08 | 16,000 |
| 13 | திகாமடுல்ல | 07 | 10 | 20,000 |
| 14 | திருகோணமலை | 04 | 07 | 14,000 |
| 15 | குருநாகலை | 16 | 19 | 38,000 |
| 16 | புத்தளம் | 08 | 11 | 22,000 |
| 17 | அநுராதபுரம் | 08 | 11 | 22,000 |
| 18 | பொலநறுவை | 05 | 08 | 16,000 |
| 19 | பதுளை | 08 | 11 | 22,000 |
| 20 | மொனறாகலை | 05 | 08 | 16,000 |
| 21 | இரத்தினபுரி | 10 | 13 | 26,000 |
| 22 | கேகாலை | 09 | 12 | 24,000 |
| | மொத்தம் | 225 | – | – |

அங்கீகரிக்கப்பட்ட அரசியல்க் கட்சிகள் பணம் கட்டத் தேவையில்லை. ஒரு வாக்காளன் தான்விரும்பும் கட்சிக்கோ அல்லது சுயேட்சைக்கட்சிக் குழுவிற்கோ வாக்களித்த பின் அதே பட்டியலில் இடம்பெறும் மூன்று வேட்பாளர்களுக்கு தனதுவிருப்பு வாக்கைத் தெரிவிக்கலாம். உதாரணமாக வன்னித்தேர்தல் மாவட்டத்தை எடுத்தால் அங்குதெரிவு செய்யப்படவிருக்கும் பாராளுமன்ற உறுப் பினர்தொகை. 06 ஆகும் எனவே 6+3=9 கொண்டதாக பட்டியல் அமையும் இதற்கான வாக்குச் சீட்டு பின்வருமாறு அமையும்.

| கட்சி | சின்னம் | தெரிவு |
|---|---|---|
| A | நெற்கதிர் | |
| B | பானை | |
| C | இல்லம் | X |
| D | படகு | |
| E | யாழ் | |

| 1 (X) | 2 | 3 (X) | 4 | 5 | 6 | 7 | 8 (X) | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

மேலே C கட்சிக்கு வாக்களித்த படியால் அப்பட்டியலிலுள்ள C கட்சிக்கு 1ஆம், 3ஆம், 8ஆம் நபர்களுக்கு இவ்விருப்பு அமைகின்றது இந்த அடிப்படையில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 25,000 வாக்குகள் அளிக்கப்பட்டன எனக் கொண்டால், பிரதிநிதித்துவம் பின்வருமாறு அமையும்.

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | ஆசனம் போணஸ் | ஆசனம் | மிகுதி | ஆசனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| A | 3000 | | - | 3000 | 01 | 01 |
| B | 5000 | | 1 | - | - | 01 |
| C | 17,000 | 01 | 3 | 2000 | - | 04 |
| D | - | - | - | - | - | - |
| E | - | - | - | - | - | - |

இங்கு அளிக்கப்பட்ட வாக்குகள் 25000÷5=5000 ஒரு பிரதிநிதி பெறவேண்டிய வாக்குகள் 5000 ஆகும். இனி கட்சி பட்டியலின் விருப்புக்கு ஏற்றவாறு தரப்படுத்தி பட்டியலில் மேலே உள்ளவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் இடைப்பட்ட காலத்தில் ஒருவர் இறக்கநேரின் அதற்கு அடுத்தபடியாக பட்டியலில் உள்ளவருக்குக் கிடைக்கும்.

அடுத்து கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் நாடுபூராகவும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் 29 தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். உதாரணமாக

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| A | 10,000 | 10 |
| B | 5,000 | 05 |
| C | 3,000 | 03 |
| D | 2,000 | 02 |
| E | 6,000 | 06 |
| F | 3,000 | 03 |
| மொத்தம் | 29,000 | 29 |

எனவே மொத்த வாக்குகள் 29000÷29=1000 ஒரு ஆசனத்துக்கு 1000 வாக்குப் பெறவேண்டும். இந்த அடிப்படையில் கட்சிகள் ஆசனத்தைப் பகிர்ந்து கொள்ளும்.

எனவே ஒட்டுமொத்தமாக விகிதாசாரத் தேர்தல் முறையை எடுத்துக் கொண்டால்,

### நன்மைகள்

01.மக்களின் சரியான விருப்பங்கள் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கும்.

02.சிறுபான்மையோருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக் கும்.

03.இடைத்தேர்தல் இடம்பெறமாட்டாது.

### குறைபாடுகள் அல்லது தீமைகள்

01.எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பானமையைப் பெறுவது கடினம்.

02.வாக்காளனுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் தொடர்பு குறைவு.

03.அடுத்து பதவிக்கு வருவதற்காக குறுக்கு வழிகளை கையாள இடமுண்டு

04.மிகவும் கடினமான தேர்தல் முறை

05.இச்சட்டசபை இயற்றும் சட்டங்கள் பொதுவான கொள்கையாக கருதப்படுமே தவிர உறுதியான கொள்கையாக காணப்படமாட்டாது. (தேர்தலில் வாக்களித்தல் என்பது சாதாரண மக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய விடயம் இது கடினமானதாக அமைந்திருப்பதே பெரும் குறைபாடாகும்.)

சுதர்மரத்தினம்,
B.A.HON'S, DIPIN EDU,SLPS,
(அதிபர்,கிளி/வன்னேரிக்குளம் ம.வி)

□

# 2007 க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 10,000 மாணவர் ஆங்கில மொழியில் தோற்றுவர்

## -கல்வியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

2007 டிசம்பரில் நடைபெறவிருக்கும் க.பொ.த.சாதாரண பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 375 பாடசாலைகளிலிருந்து ஏறத்தாள 10,000 மாணவர்கள் ஆங்கிலமொழி மூலமாக மூன்று பாடங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றவிருக்கிறார்கள்.

ஆங்கில மொழி மூலமான இந்தப்போதனை நடவடிக்கைகளை மேலும் 150 வரையிலான பாடசாலைகளில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் ஏறத்தாழ 600 பட்டதாரிகளுக்கு இதற்கான விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் கல்வி,உயர்கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

உலகளாவிய அறிவை பெற்றுக் கொள்வதற்கு தனியே தமிழ்,சிங்களம் அறிந்திருப்பதில் பயனில்லை. கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள இருமொழி தெரிவுத் திட்டத்தின் இலக்கை அடைவதற்கு ஆங்கிலக்கல்வி மிகவும் அவசியமானது.

இவ்வாறு ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை கல்விஅமைச்சர் மகாநாமவித்தியாலயத்தில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

# குடாநாட்டில் 46,700 குடும்பங்களுக்கு குடியிருப்புக்கள் அமைக்கப்பட வேண்டும்

## -யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து வீடுகளை இழந்த 39 ஆயிரத்து 190 குடும்பங்களுக்கு இவ்வாண்டில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.இது தொடர்பாக அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிடும் போது,புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்ததன் பின்னர் மீளக்குடியமர்ந்த 40 ஆயிரம் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.இவ் வருடம் மன்னார் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து சுமார் ஆயிரம் குடும்பங்களும், இந்தியாவிலிருந்து 200 குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்கள் 500உம், உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த 5000 குடும்பங்களும் மீளக்குடியமர்வார்கள் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

இவர்களையும் சேர்த்து யாழ். குடாநாட்டில் 46ஆயிரத்து 700 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இந்தத் தொகையில் 7ஆயிரத்து 510 வீடுகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைக்கவுள்ளன. மிகுதியாகவுள்ள 39 ஆயிரத்து 190 குடும்பங்களுக்கான புதிய வீடுகள் அமைப்பதற்கு நிதி தேவைப்படுகின்றது என்றும் அவர் கோரிக்கையில் கூறியுள்ளார்.

# புதையல் எடுக்கச் சென்றோர் பொலிசாரிடம் சிக்கினர்!

வவுனியா-சிதம்பரபுரம் பகுதியில் புதையல் தோண்ட சென்றவர்கள் எனும் சந்தேகத்தில் ஐந்து பேரை பொலிசார் கைது செய்துள்ளார்கள்

இவர்கள் ஐந்து பேரும் பொலிசாரினால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, இந்த மாதம் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வவுனியாவின் தென்மேற்கே ஆறுகிலோமீற்றர் தூரத்திலுள்ள இடத்திலேயே இவர்கள் ஐந்துபேரும் புதையல் எடுக்கச் சென்றுள்ளார்கள்.

# இரவு நேரக்கற்றலுக்கு பங்குத்தந்தை ஏற்பாடு

முள்ளியவளைப் பிரதேச பங்குத்தந்தை யூட்அமலதாஸ் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளை வடக்கு திரேசா முன்பள்ளியில் அப்பகுதி மாணவர்களின் இரவு கற்றலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி பிரத்தியேகமாக அமைதியாக இருந்து கற்பதற்காக மின்சார ஒழுங்குகள் செய்யப்பட்டு மின் ஒளியில் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மேற்படி மாணவர்களை மேற்பார்வை செய்வதற்காகவும் ஒரு ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி செயற்பாட்டுக்கு அப்பகுதி மாணவர்களின் பெற்றோர்கள் பங்குத்தந்தைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (.ஆ)

# முல்லை.மாவட்டத்தின் சில பகுதிகளில் பரவலாக தேர்தல் தயார்படுத்தல்கள்

முல்லைத்தீவில் தேர்தல் பிரச்சார வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஆங்காங்கே மக்களைத் திரட்டி கருத்துக்களையும் வழங்குவதோடு துண்டுப் பிரசுரமும் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, வன்னி மாவட்டத்தின் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் வேட்பாளர் சதாசிவம்-கனகரத்தினம் (தமிழீழ போக்குவரவுக்கழக முகாமையாளர்) வியாபார நிலையங்களுக்கும், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சென்று கலந்துரையாடி துண்டுப் பிரசுரமும் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும்,புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல பகுதிகளில் அரசியல், தேர்தல் கருத்தரங்குகள் பரவலாக பிரதேச அரசியல் துறையால் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வு 7ஆம் திகதி தேவிபுரத்திலும், 8ஆம் திகதி வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திலும் இடம் பெற்றது.

7ஆம்திகதி நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் நவநீதன் தலைமையில் நடைபெற்றது. கருத்துரையை முல்லை. மாவட்ட தேர்தல் வேட்பாளர் சதாசிவம்-கனகரத்தினம், முல்லை. மாவட்ட ஊடகப்பேச்சாளர் வேதவனம் ஆகியோர் வழங்கினர். 8ஆம் திகதி இடம்பெற்ற வள்ளிபுனம் கருத்தரங்கில் புதுக்குடியிருப்புப் பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சீதாராம் தலைமையில் ஆரம்பமானது. கருத்தரங்கில் முல்லை மாவட்ட ஊடகப் பேச்சாளர் வேதவனம், முல்லை மாவட்ட தே.எ. பேரவைச் செயலர் செல்வநாயகம் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். (19,20)

# இயல்பு நிலையைப் பாதிக்கும் வகையில் கட்சி ஆதரவாளர் செயற்படக்கூடாது

## கொழும்பு நீதிமன்றம் எச்சரிக்கை

அரசியல் கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் பிரச்சார கூட்டங்களின் போது இயல்பு நிலையைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என கொழும்பு நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்தைத் தாக்கிய தன் பேரில் கைது செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் ஆதரவாளர்கள் 7 பேரையும் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை காவலில் வைக்குமாறும் மேலதிக நீதவான் ரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை கட்சித்தலைவர்களும் அமைதியான வழியிலேயே தமது பிரச்சாரங்கள் மற்றும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (32)

## பயிற்சி வகுப்பு

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 07ஆம் திகதி முல்லைத்தீவு ம.வியில் முல்லை கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் வே.இரத்தினராஜா தலைமையில் இடம் பெற்றது. இப்பயிற்சி வகுப்பினை வன்னித் தேர்தல் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் கருணாநிதி, நானாட்டான் பிரதேச செயலர் திருஞான சம்பந்தர் ஆகியோர் நடத்தினர். (20)

# ஒருமைப்பாடான நடைமுறைகள் ஐ.ம.சு.முன்னணியிடம் இல்லை

(கொழும்பு)

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்ற நிலையில் மக்கள் சுதந்திர ஐக்கிய முன்னணியில் புரிந்துணர்வு உடன்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகவும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத்தயாராகவுள்ளதாகவும் தெரிவித்து வருவது கூட்டமைப்பினரிடையே ஒரு நிலையான ஒருமைப்பாடுடைய நடைமுறைகள் இல்லையென்பதை தெளிவுபடுத்துவதாகவும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதனை மக்கள் சுதந்திர ஐக்கிய முன்னணி விமர்சித்து வருவதோடு அதனை நிறுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

ஆனால் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி அப்போதைய அரசவங்கித் தலைவர் ராஜன் ஆசிர்வாதம் உலக வங்கியுடன் 72 கம்பனிகளை தனியார் மயமாக்கும் உடன்படிக்கையினை கைச்சாத்திட்டதாகவும் அவர் கூறினார்.

இதேபோன்று 2001 ஆம் ஆண்டு சனாதிபதி தலைமையிலான கட்சியின் கொள்கைத் திட்டத்தில் ஜே.வி.பிக்கு நவீன பொருளாதாரம் பற்றி தெரியாது என ஒரு பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாட்டை முன்னேற்றுவதாக இருந்தால் தனியார் மயமாக்கல் அவசியம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது தனியார் மயமாக்கல் நாட்டை பாழாக்கும் என சனாதிபதி தலைமையிலான கூட்டு முன்னணி தெரிவித்து வருவதாகவும் ஒப்பிட்டுக் காட்டியிள்ளார். (32)


# சேரன் வாணிபம்

## பணி வேண்டுகை

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு மேலதிக சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டு பணிவழங்குவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

மேலதிக தகைமைகள்:-

01) ஆண்டு 09 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

02) வயது 23-35 இற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03) வன்னிப் பெருநிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்

வேண்டுகையாளரால் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன் விபரத்துடன் 17.03.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சேரன் வாணிபம்,நடுவப் பணி மனை,கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,கிளிநொச்சி.

(சி.9418)



# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளை

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையில் புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளல் காலாவதியான அங்கத்துவத்தை புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 25.03.2004 வியாழக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ளது. எனவே புதிதாக இணைத்துக் கொள்ள விரும்பும் அங்கத்தவர்களும், புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அங்கத்தவர்களும் 2004.03.25க்கு முன் கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பளை பிரிவுக்கிளைகளுடன் அல்லது மாவட்டக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன். 'நன்றி'

க.கணேஸ்
கௌரவ செயலாளர்.

(சி-9417)



# தொலைத் தொடர்பு நிலையங்களில் பணியாற்ற பணியாளர் தேவை



புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி, மல்லாவி போன்ற இடங்களில் தொலைத்தொடர்பு நிலையங்களில் பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கான பணியாளர்கள் (இருபாலாரும்) தேவை.



## 01. கணக்குப்பதிவாளர்

தகைமை: க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தக பிரிவில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 02. தொலைபேசி இயக்குநர்

தகைமை: க.பொ.த.சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

## 03. அலுவலக உதவியாளர்
## 04. சிற்றூழியர்

வயதெல்லை:- 18-45இற்குட்பட்ட ஆண்கள்

மேற்படி பணிக்கு தகுதியுடையவர்கள் எதிர்வரும் 15.03.2004 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் பிரிவு, ஈழநாதம் பணிமனை அருகாமை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாக தொடர்பு கொள்ளவும்). (9330)



# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதிக்கு கீழ் வரும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் 2004.03.17 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப் பகுதி, கிளிநொச்சி எனும் முகவரிக்குச் சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

## ஆய இளநிலை அதிகாரி (ஆண்)

தகைமை:-

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழை உடையவராக இருத்தல்.

## விடுதிக் காப்பாளர் (பெண்)

தகைமைகள்:-

01) 35-50 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்.

02) க.பொ.த (உ.த) சித்தியடைந்திருத்தல்.

03) உடல் ஆரோக்கியமும்,திடகாத்திரமும் உடையவராக இருத்தல்.

(சி.9415)



சிந்தனைக்கு

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 14 -03-2004


## புலிகளைச் சீண்டும் முயற்சி!

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களையும், விடுதலைப் புலிகளையும் சீண்டிப்பார்க்கும் முயற்சிகள் தற்பொழுது தீவிரமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் விடுதலைப் புலிகளை எவ்வாறெனினும் ஒரு யுத்தத்தில் ஈடுபடுத்தி விடுவதற்கான முழு அளவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றே கூறலாம்.

இதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட கருணா என்கின்ற முரளிதரனின் பிரதேசவாதக் கருத்துக்களுக்குப் பெரும் முதன்மையும், முக்கியத்துவமும் அளித்துவரும் யுத்தத்தை ஆதரிக்கும் சக்திகள், மறுபுறத்தில் தமிழீழ தேசியத் தலைமையைச் சிறுமைப்படுத்தும் வகையிலான முறையில் தகவல்களை வெளியிடுபவையாகவும் உள்ளன.

கருணா (முரளிதரன்) கிளப்பும் பிரதேசவாதமானது தமிழர் தேசியத்திற்கும், உரிமைப்போராட்டத்திற்கும் எதிரானது என்பதும், பாதகமானது என்பதும் வெளிப்படையானது. இதற்கு சிறிலங்கா பேரினவாத சக்திகளும், தமிழர் தேசியத்தைச் சிதைத்துவிடும் நோக்கில் இதுவரையில் செயற்பட்டு வந்த சக்திகளும் முழு அளவில் ஆதரவை அளிக்கும் என்பதும் தெரிந்ததொன்றே.

கருணா பிரதேசவாதத்தை கையில் எடுத்துக் கொண்டமை கூட இச்சக்திகளின் பின்னணியுடன் கூடியதானதொரு நடவடிக்கை எனக் கருதுவதற்கும் இடமுண்டு. ஆயினும் கருணாவின் துரோகத் தனத்திற்கு இதைக்காரணமாக்கி விடமுடியாது. இதேவேளை கருணாவின் துரோக நடவடிக்கையானது தமிழர் தேசியத்தை சிதைப்பதற்கு முற்பட்டுள்ள சக்திகளுக்கு இரு வகையில் அனுகூலமானது.

ஒன்று தமிழர் தாயகப் பிரதேசத்தினுள் பிரதேசவாதத்தினை ஏற்படுத்துவதன் மூலம் தாயகத்தினுள் பிரிவுகளை ஏற்படுத்துதல், இரண்டாவது விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலைப் பலவீனப்படுத்துதல். அதாவது புலிகளுக்கிடையில் பிரிவினையை–மோதலை ஏற்படுத்துவதன் மூலம் இராணுவரீதியில் பலவீனமாக்குதல்.

இதற்காகவே பிரதேசவாதக்கருத்துக்களை வெளிப்படுத்தும் கருணாவின் கருத்துக்களுக்குச் சிறிலங்கா ஊடகங்களில் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு கொடுக்கப்படும் முக்கியத்துவமானது தமிழ் மக்களை மேலும் மேலும் பிளவிற்கு உள்ளாக்கும் வகையிலும், பிரதேசங்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகவும் உள்ளது.

இவ்வாறாக தமிழர் தாயகத்தைச் சிதைப்பதற்கான நடவடிக்கைகளை ஒருபுறம் மேற்கொண்டிருக்கையில் மறுபுறத்தில் தமிழீழத் தேசியத் தலைமையைச் சிறுமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அவை மேற்கொண்டுள்ளன. இச்செயற்பாட்டில் சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களுடன் சில வெளிநாட்டு ஊடகங்களும் இதற்களிக்கும்முதன்மை வெளிப்படையாக அவதானிக்கத்தக்கதாகும்.

குறிப்பாகக் கூறுவதானால் தமிழீழ தேசியத் தலைமையை– வன்னித் தலைமை எனக் குறிப்பிடும் வகையில் அவை தமது பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்பவையாக உள்ளன. அதாவது தேசியத் தலைவர் பிரபாகரனைச் சிறுமைப்படுத்தும் வகையிலும் இதன் மூலம் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் சீற்றத்தை உண்டாக்கும் வகையிலும் இப்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இதன்மூலம் விடுதலைப்புலிகளை ஆத்திரம் ஊட்டுவதும், அவர்களை யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பதுமே இச்சக்திகளின் நோக்கமாகும். இதன் விளைவாக விடுதலைப் புலிகள் பலவீனப்படுவார்கள். தமிழர் தேசியம் சிதைவிற்குள்ளாகும், சர்வதேசத்தின் வெறுப்பிற்கு உள்ளாவார்கள்.– அதாவது, அண்மையில் விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியில் பெற்றுள்ள அங்கீகாரம், கௌரவம் என்பனவற்றை சிதைவிற்குள்ளாகுவதுமே அவர்களின் குறிக்கோளாகும்.

ஆனால் தமிழீழத் தேசியத்தலைமையும், விடுதலைப் புலிகளும் கருணாவின் துரோகத்தனத்தை மட்டுமல்ல தமிழின விரோத சக்திகளினதும் யுத்தவெறியர்களினதும் நோக்கத்தினைப் புரிந்து கொண்டவர்களாகவே உள்ளனர். தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் "மட்டு–அம்பாறைப் பிரதேசங்கள் இரத்தம் எதுவும் சிந்தாது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்" என்ற அறிவிப்பு வெளிப்படுத்துவதாய் உள்ளது. அதாவது துரோகிகளினதும் ஒடுக்கு முறைசக்திகளினதும் எதிர்பார்ப்புக்களுக்கு, விடுதலைப்புலிகள் பலியாகிவிடப் போவதில்லை என்பதற்கான அறிவிப்பே இதுவாகும்.

## சிறிலங்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு இறுதி முடிவெடுக்க அமெரிக்கா தயக்கம்

சிறிலங்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்து கொள்வது தொடர்பில் இறுதி முடிவெதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்றும் இந்த முன்மொழிவை மிகக் கவனமாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்திருக்கும் அமெரிக்கா, சிறிலங்காவில் அமையப் போகின்ற அரசாங்கத்தின் வர்த்தக அரசியல் தன்மைகளே சுதந்திர வர்த்தக உடன படிக்கையை தீர்மானிக்கும் என்று அறிவித்திருக்கிறது.

சிறிலங்காவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன் படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பில் முக்கிய பங்காற்றி வரும் டேவிட்ஷார்க் கூறியுள்ளார்.

சிறிலங்காவுடன் வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார். சிறிலங்காவுடனான வர்த்தக செயற்பாடுகளை மேலும், அதிகரிப்பதற்கு நிறையவே வாய்ப்பு இருக்கின்றது.

சிறிலங்காவும் அமெரிக்காவும் ஏற்கனவே இருதரப்பும் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக மூன்று வெற்றி கரமான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னரான அரசாங்கத்தின் வர்த்தக அரசியல் தன்மை சிறிலங்காவுடனான எமது சுதந்திர வர்த்தக உடன் படிக்கையைத் தீர்மானிக்கும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை காரணமாகவும், சமாதான பேச்சுவார்த்தை காரணமாகவும், அரசியல் பொருளாதாரமற்றும் சமூக ரீதியான பல நன்மைகளை சிறிலங்கா அனுபவிக்கின்றது.

2001 இல் இருந்தமைக்கு மாறாக 2002 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4சதவீத வளர்ச்சி கண்டிருப்பதைக் குறிப்பிட்டுக் கூறுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். 2003 இன் முதற் காலாண்டுப் பகுதியில் பொருளாதார வளர்ச்சியும் 5.5 சத வீதத்தினால் மேலதிக வளர்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்

## யுத்தம் ஏற்பட்டால் அதற்கு முகம்கொடுக்கும் மனோநிலையில் படையினர் தற்போது இல்லை

### - முன்னாள் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க

(கொழும்பு)

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் அதற்கு முகம்கொடுத்து போரிடக் கூடிய மனோ நிலையில் பாதுகாப்புப் படையினர் இல்லையென முன்னாள் இராணு வப் பேச்சாளரும் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரி வித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில் தன்னால் இதனை உறுதிபடத் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில; முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஜெயசிக்குறு என்ற பெயரில் மூன்று வருடங்களாக இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு கடற்படையினரையும் விமானப் படையினரையும் காட்டில் போரிடச் செய்து யுத்தத்தைக் கேலிக்கூத்தாக்கிமை காரணமாகவே எழுபத்தியிரண்டு மணித்தியால காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இராணு வத்தினரை ஓமந்தை வரை பின் னோக்கிச் செல்ல வைத்தனர் எனவும் சரத் முனசிங்க தெரி வித்துள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி. பற்றி அவர் தெரிவிக்கையில், இன்று சனநாயகம் பற்றிப் பேசும் ஜே.வி.பி.யினர் 1988-1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஐந்நூற்றி ஐம்பத்தியொரு பேரையும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த நூற்றி அறுபத்தியிரண்டு பேரையும் கொடூரமாகக் கொலை செய்து தங்கள் வெறியைத் தீர்த்துக் கொண்டவர்கள் எனவும் கூறினார்.

மக்கள்விடுதலை முன்னணியினர் தாங்கள் சம்பளம் பெறுவதில்லை எனக் கூறி வருகின்றனர். இதனை ஒருவரும் நம்பக் கூடாது.

ஏற்கனவே மக்களிடம் கொள்ளையிட்ட கோடிக்கணக்கான தங்கத்தை வெளி நாட்டு வங்கிகளில் அவர்கள் முதலீடு செய்துள்ளனர். அதனால் கிடைக்கும் வட்டிமூலம் ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஆடம்பர வாழ்க்கையை வாழ்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அறுதிப் பெரும்பான்மை இல்லாவிடினும் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும்

### சிறிலங்கா சனாதிபதி கூறுகின்றார்

(கொழும்பு)

அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் புதிய அரசியல் யாப்பு ஒன்று கொண்டு வரப்படும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி மாளிகையில் உள்ளூர் வர்த்தக சங்கத்தினருடன் சனாதிபதி நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பொதுத் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஒழிப்பதற்கென பாராளுமன்ற அரசியல் யாப்புச் சபை ஒன்று நியமிக்கப்படும் என்றார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; கொண்டு வரப்படும் புதிய அரசியல் யாப்பு பாராளுமன்றத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதன் மூலம் மக்களின் மேலாண்மை பாதுகாக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## பிக்குகள் பொதுத்தேர்தலில் குதித்தமை பௌத்த சாசன அழிவிற்கு வழிவகுக்கும்

### மல்வத்தை,அஸ்கிரிய பீடாதிபதிகள் மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

பௌத்த பிக்குமார் தேர்தலில் போட்டி இடுவது பௌத்த சாசன அழிவிற்கு வழிவகுக்கும் என மல் வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் உள்ள மூன்று பௌத்த பீடங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் மகா சங்கம் நேற்று முன்தினம் கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற பௌத்த மாநாடுஒன்றிக்கு அனுப்பிவைத்துள்ள விஷேட செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த மாநாட்டில் நாடு,இனம், பௌத்த சாசனம் ஆகியவற்றின் நலன் கருதி எட்டு அம்ச விஷேட வாக்குறுதி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கைக்குரிய பேராசிரியர் அந்தங்கான இரத்தினபாலதேரர் தெரிவிக்கையில் பௌத்த பிக்குமார் அரசியலில் ஈடுபடுவது பௌத்த சாசனத்தை அழிப்பதுடன் மதகுருமாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வந்த உறவுகளைப்பாதிப்பதாக இருப்பதாகவும் அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடு இப்பொழுது மிகவும் முக்கியமான காலகட்டம் ஒன்றில் இருந்து வருகின்றது. இக்கட்டத்தில் மகாசங்கத்தினர் நாட்டின் ஆட்சியாளர்களை வழி நடத்த வேண்டும்.

ஆனால் பிக்குமார் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது மகா சங்கத்தின் புனிதத் தன்மையை இல்லாமல் செய்து விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ரவி கருணாநாயக்கவை அச்சுறுத்தினார்

## விமல் வீரவன்சவை கைது செய்ய ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவையும், அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத்தையும் உடனடியாக கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர், தேர்தல் ஆணையாளர், தேர்தலுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடமும் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை ராஜகிரியவில் உள்ள ரவி கருணாநாயக்கவின் அரசியல் அலுவலகத்தினுள் கைத்துப்பாக்கி கிரனெட்டுடன் புகுந்த 40ற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் வந்த முன்னாள் ஜே.வி.பி. எம்.பி.க்களான விமல் வீரவன்சவும், விஜித்த ஹேரத்தும் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள் என்றும் ஐ.தே.கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. கூறியுள்ளது.

# தேர்தலின் மூலம் புலிகளின் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெறவேண்டும்

## ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழரசு கட்சிக்கு தமது முழுமை ஆதரவைத் தெரிவித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் 20 வருட கால சுயநிர்ணய போராட்டத்தின் சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வேண்டுகோளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், மட்டக்களப்பு மாவட்ட தமிழரசு கட்சியின் வேட்பாளருமான ஜோசப் பரராஜசிங்கம் விடுத்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் தமிழ் மக்களை பொறுத்த வரையில் தமது உரிமைகளுக்கான சர்வசன வாக்கெடுக்கப்பாகும். 20 வருட யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் வாய்ந்த நிலையிலேயே யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டனர். அத்துடன் தொடர்ந்த பேச்சுவார்த்தையின் பின்னர் தன்னாட்சி அதிகார வரைவு ஒன்றையும் அவர்கள் அரசிடம் சமர்ப்பித்தனர்.

இந்த நிலையில் சமாதானத்தை விரும்பாத சக்திகளால் நாடாளு மன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுகின்றது.

இந்த நிலையில் சர்வதேச சமூகம் இந்த தேர்தலை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழர் ஒரு தேசிய இனம் அவர்களுக்கு சுயநிர்ணயம் உண்டு, தாயக கோட்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி வரைவுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் செயற்பட வேண்டும் என ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

சுமார் 17 ஆயிரத்தி500 வீர வேங்கைகளின் உயிர்களை அர்ப்பணித்து தமிழ் மக்களின் விடுதலையை சர்வதேச அரங்கில் உயர்த்தியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளே.

இதனடிப்படையில் தமிழ் மக்களுக்கு அவர்களை கௌரவிக்கும் கடப்பாடு உண்டு எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# கைக்குண்டு வெடிப்பில் இரு படையினர் பலி!

அநுராதபுரம் பூகொட இராணுவ முகாமில் நேற்று முன்தினமிரவு கைக்குண்டொன்று தவறுதலாக வெடித்ததில் இரு இராணுவத்தினர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார். பயிற்சியின்போது இக்கைக்குண்டு வெடித்ததில் பயிற்சியாளர், பயிற்றுவிப்பாளர் ஒருவர் பலியாகினர். மற்றொரு பயிற்றுவிப்பாளர் படுகாயமடைந்தார்.

# ஹெல உறுமயவின் சுவரொட்டி ஒட்டிய பிக்குகள் மீது இனந்தெரியாதோர் தாக்கு

ஹெல உறுமய கட்சியின் ஆதரவாளர்கள் பலர் பண்டாரகமையில் தாக்கப்பட்டதுடன் ஒருவர் படுகாயமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் இரண்டு பிக்குகள் கடுமையாகத் தாக்கப்பட்டு விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர் இவர்கள் பண்டாரகமையில் சுவரொட்டிகள் ஒட்டிக்கொண்டிருக்கும் பொழுது அங்கு திடீரென வந்தவர்கள் இத்தாக்குதலை நடத்தி உள்ளதாக பிக்குகள் அறிவிக்கின்றனர்.

இத்தாக்குதலில் ஐக்கிய தேசிய முன்னணியின் களுத்துறை மாவட்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் சம்மந்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கின்றனர்.

## நாளை சந்திப்பர்

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளான வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் குழுவொன்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளது. நாளை இடம் பெறவுள்ள இச்சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையிலான குழு கலந்துகொள்ளவுள்ளது. (25)

# சு.க-ஜே.வி.பி.பேச் இணக்கப்பாடு கண்டபின் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை

## - சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

இப்பொழுது முரண்பாடுகள் இருந்தாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி இருதரப்பும் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் கண்ட பின்னர் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடிவெடுத்துள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் சனாதிபதி கருத்துக்களை வெளியிட்டுள்ளார். நாடளாவிய ரீதியில் அரசாங்க அதிபர்களும், பிரதேச செயலர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

கட்சி எதுவாக இருந்தாலும் குற்றம் புரிவோருக்கு எதிராக வாக்களிக்க வேண்டாம் என சனாதிபதி கேட்டுள்ளார். அத்துடன் எதிர்வரும் தேர்தல் சுயாதீனமான நடைபெறவேண்டும் எனத் தெரிவித்த சனாதிபதி இராணுவத்திலிருந்து தப்பி வந்தோர் தேர்தல் வன்முறையில் ஈடுபடுவதாகக் கூறினார். இதற்கு அரசியல் வாதிகளும் காரணம் எனக் குற்றம் சுமத்திய அவர் அரசியல்வாதிகளின் புதல்வர்களே பெருமளவு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

1977ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார கொள்கையின் பின் இளைஞர்கள் குற்றச் செயல்களுக்குத் தள்ளப்பட்டதாகவும் இதனால்தான் போதைவஸ்து பாவனை ஏனைய குற்றச்செயல்கள் அதிகரித்ததாகவும் அரசியல் வாதிகளின் பொறுப்பற்ற தன்மையும் காரணம் என கூறினார்.

இந்த திறந்த பொருளாதாரக் கொள்கை சிறந்ததாக இருந்தாலும், இலங்கையில் இதனைக் கொண்டு வந்தமுறை பிழையானதாகும் எனவும் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்கிறது. மக்கள் விடுதலை முன்னணியோ நிர்வாகத்தை பன்முகப்படுத்தக் கோருகிறது. எனினும் அந்தக்கட்சி அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்க்கவில்லை எனவும், அதிகாரப்பவலாக்கத்துக்கும் நிர்வாகத்தை பன்முகப் படுத்துவதற்கும் இடையில் பலபடிகள் கடந்துசெல்ல வேண்டியுள்ளது. எனினும் இருதரப்பும் இது தொடர்பாக தீர்க்கமாக பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினை தீர்வுகாண பேச்சுவார்த்தைக்கு செல்ல முடிவெடுத்துள்ளதாக கூறினார்.

இந் நிலையில் ஏனைய கட்சிகளையும் பேச்சவார்த்தைகளில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் தமிழீழ விடுதலைப்புலிகளை இதற்கு கட்டாயப்படுத்த முடியாது என்றாலும் பேச்சுவார்த்தைகளின் போது அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்க தமது எதிர்கால அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக சனாதிபதி தெரிவித்தா. (32)

### ஐ.ம.சு...

சுசில் பிரேம்நாயக்க தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தேர்தல் ஆணையாளர் இந்த முறைப்பாடுகள் யாவும் பொலிஸ்மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வார் எனக் குறிப்பிட்டார். (32)

### கூட்டமைப்பு...

தெரிவித்துள்ளன.

குறிப்பாக யாழ்.பல்கலைக் கழக மாணவ நிதியத்தின் முன் னாள் தலைவரான சி.கஜேந் திரனும், தமிழ் தேசியக்கூட்டமைப பின் சார் பில் போட்டியிடுகின்ற நிலையில் மாணவர்களது ஒத்துழைப்பு விரும் பத்தக்கதேயென மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

### ஏமாற்றி....

அங்கத்தவர்கள் பின்னணியில் இருப்பதாகவும் கடத்தப்பட்டுள்ள பெண்கள் மன்னார், பேசாளை, வவுனியா, தோணிக்கல், வத்தளை, குணசிங்கபுர ஆகிய இடங்களில் தடுத்துவைக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களில் 14 பெண்கள் ஏற்கனவே தப்பிச் சென்று விட்டதாகவும் நேற்றுமுன்தினம் தப்பிச்சென்ற பதின்நான்கு பேரில் சிலரை மீண்டும் அவர்கள் பிடித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (21)

### கிளி...

சிறீதரன் (வயது-36) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதிலும் இரவு மரணமானார்.

கிளி.மாவட்ட நீதியானர் கோகுலன் ஸ்தலத்திற்கு நேரிற் சென்று நிலைமையினை பார்வையிட்டு சம்பவ விசாரணைகளை மேற்கொள்ளும் வண்ணம் காவல் துறையினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டுவருகின்றனர். (சோ)

### தன்னாட்சி...

பாளரான க.துரைரட்ணசிங்கம் பேசுகையில், எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழர்களின் இறுதி இலக்கை சர்வதேச அரங்கிற்கு தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தவிருக்கின்றது. வடக்குக் கிழக்குக்கு என்று இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அமைப்பை வழங்கவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பின்னால் உறுதியாக நிற்கிறார்கள் என்பதை எதிர்வரும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். வேட்பாளர் எஸ்.கௌரிமுகுந்தன் பேசுகையில், தமிழ் மக்கள் தாங்கள் வாக்குகளை ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை எதிர்வரும் பொதுத்தேர்தல் உணர்த்துகின்றது. இதன்மூலம் எமது விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணம் பெறுகின்றது என்றும் அவர் கூறினார்.

வேட்பாளர் க.ரகுநாதன் பேசுகையில், எதிர்வரும் பொதுத்தேர்தல் முடிவுகள் மூலம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை தங்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். மீண்டும் உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்தார். வேட்பாளர் ஏ.எச். சாகுல்ஹமீது பேசுகையில், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளையும், அவர்களது உணர்வுகளையும் தமிழ்த்தலைவர்கள் என்றுமே மதித்து நடந்துவந்துள்ளார்கள் என்று தெரிவித்தார். வேட்பாளர் வ.விக்கினேஸ்வரன் பேசுகையில், தேசியத் தலைவரின் விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டுவதாக தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார். வேட்பாளர் சதா.சண்முகநாதன் பேசுகையில், வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து இருபதுக்கு அதிகமான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலம் விடுதலைப் புலிகளின் உரிமைப் போருக்கு உரமூட்டுவோம் என்று தெரிவித்தார். (25)

### தெரிவத்தாட்சி...

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபருடனும் இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாட தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாகவும் உதவி தேர்தல் ஆணையாளர் கூறினார்.

# சாவு அறிவித்தல்

## பொன்னையா சிறிதரன்

நாவக்குழியை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்டவரும் மருந்துப்பால்மா வகைகள் நருவப் பணியக பணியாளருமான பொன்னையா-சிறிதரன் என்பவர் அகால சாவடைந்துள்ளார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இவருடன் அகால சாவடைந்த திரு ஈஸ்வரச்சந்திரன் (ஆங்கிலஆசிரியர்) அவர்களின் மரணச் செய்தியையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்,
பணிப்பாளர்,
மருந்துப்பால்மா வகைகள்
(தனியார்)வ-து, நருவப்பணியகம்.

(சி-9332)

# துயர் பகிர்வோம்



**உயர்திரு. ஈஸ்வரச்சந்திரன்**
(ஆங்கில ஆசிரியர்)
மறைவு:- 13-03-2004

தன்னலமற்ற நின்
தாராள சேவையால்
ஆங்கில அறிவுடன்
பொது அறிவையும் புகட்டி
உம் எண்ணங்கள் யாவும்
எம் ஈழத்தின் உயர்விற்காய்
இருக்க வேண்டுமென சிந்தையிலே நினைத்து
ஆண்டுகள் பலதாய்
நேர்மையும் கண்டிப்பும் தவறாமல்
சீரிய நோக்கோடு
எமை வளர்த்த உத்தமரே
உங்கள் உயிர் அமைதிக்காய் வேண்டிநிற்கும்

இவருக்கும் இவருடன் அகாலசாவடைந்த பொன்னையா-சிறிதரன் அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவப் போராளிகளும்
மருத்துவமனை நிர்வாகத்தினரும்.

(3547)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.